**சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியம் - 2017**

---

சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களானவை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

(அ) நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்ததென அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், நியமத்திற்கு முரணாக, விதிக்கப்பட்ட அபராதங்கள் மற்றும் பறிமுதல்கள் மீது காசு அடிப்படையிலான கணக்கீட்டுக் கொள்கையொன்றை திணைக்களம் பின்பற்றியிருந்தது.

(ஆ) நியமத்தின் 21(இ) பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களின் தொகுப்பொன்றுடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய கூறுகளில், காசுப்பாய்ச்சல் கூற்று ஒரு கூறாகக் காணப்படுகின்ற போதிலும், நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் தொகுப்பில் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நியமத்தின் 21(உ) பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்றில் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட தொகைகளினை உள்ளபடியான தொகைகளுடன் ஒப்பிடுவதன் மூலம் தனியானதொரு நிதிக்கூற்றொன்றாக அல்லது தனியானதொரு நிரலில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களின் கூறுகளுடன் பாதிடப்பட்ட கூறுகளுக்கிடையே சரிப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் பாதிடப்பட்ட தகவல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு புலனாய்வு நடவடிக்கை இறுதியாக்கப்பட்டிருந்த 64 வழக்குகள் தொடர்பில் விதிக்கப்பட்ட ரூபா 1,021,654,862 அபராத தொகையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருந்த ரூபா 451,553,540 தொகையில் 50 சதவீதமான சுங்க வெகுமதிகள் நிதியத்திற்கு கிடைக்கவேண்டிய ரூபா 225,776,770 தொகை மற்றும் மேலும் கிடைக்கவேண்டிய ரூபா 570,101,322 அபராத தொகையின் 50 சதவீதமான வெகுமதி நிதியத்திற்கு கிடைக்கவேண்டிய ரூபா 285,050,661 தொகை என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுங்க கட்டளைச்சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவம் மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கான 20 சதவீதம் மற்றும் சுங்க வெகுமதிகள் நிதியத்திற்கான அபராதம் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் வருமானத்தின் 50 சதவீதமாக பங்களிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கான வருமானமாக இனங்காணப்பட்டிருந்ததுடன், அதற்குரிய விகிதாசாரத்தில் இனங்காணப்பட வேண்டிய மற்றும் கணக்கிற்கு கொண்டுவரப்படவேண்டிய ரூபா 25,974,067 தொகையொன்று, கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

சுங்க வெகுமதிகளின் செலுத்துகைக்காக வெகுமதிகளின் குறித்துரைக்கப்பட்ட சேகரிப்புக்களினை தயாரித்த பின்னர் வெகுமதி நிதியம் மற்றும் அதன் உபநிதிகளிலுள்ள மீதிகள் தொடர்ந்தும் காணப்படக்கூடாத போதிலும், திறைசேரியிடமிருந்து தேவையான ஏற்பாடுகளினை பெற்றுக்கொள்வதன் மூலம் செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 1999 ஆம் ஆண்டில் அதற்கமைய செலுத்தப்பட்டிராது சேமிக்கப்பட்டு தொடர்ந்தும் காணப்பட்ட ரூபா 23,300,456 தொகையான மீதி 2017 திசெம்பர் 31 வரை ரூபா 816,109,109,695 தொகையொன்றிற்கு அதிகரித்திருந்ததுடன் அந்த தொகை நிதிக்கூற்றுக்களில் திறைசேரியிடமிருந்து அறவிடப்படவேண்டிய மீதியொன்றாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.3 போதிய அதிகாரத்தினால் ஆதரவளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1969 இன் 17 ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தின் 153(2) ஆம் பிரிவின் பிரகாரம், வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதிகளின் பகிர்ந்தளிப்புக்கு நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவேண்டியதுடன் அவை தொடர்பில் முறையொனதொரு முறைமையொன்று தயாரிக்கப்படவேண்டிய போதிலும், திணைக்களத்தினால் சுங்க வெகுமதிகளின் பங்களிப்புக்கு விநியோகிக்கப்பட்டிருந்த திணைக்களத்திற்கான 1988 சனவரி 28 இன் PL 118 ஆம் இலக்க நிதி அமைச்சின் அங்கீகாரமாகக் காணப்பட்ட ஆவணம் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பெற்றுக்கொள்ளக்கூடியதாகக் காணப்பட்ட தகவலின் பிரகாரம், 1999 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான முன்னைய 19 ஆண்டுகளுக்குள் அவ்வாறானதொரு வகையில் அங்கீகாரம் பெற்றுக்கொண்டமையினை உறுதிப்படுத்தியிராது, அண்ணளவாக ரூபா 14 பில்லியன் தொகையொன்று சுங்க உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல் வழங்கியவர்களுக்கு வெகுமதிகளாக செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய 5 ஆண்டுகளுக்குள் செலுத்தப்பட்டிருந்த ரூபா 7.07 பில்லியன் தொகையொன்றின் மூலம் மாத்திரம் அசாதாரண நிலமையொன்று சுட்டிக்காட்டப்பட்டதுடன் அதற்கமைய, அண்ணளவாக ரூபா 14 பில்லியன் தொகை செலுத்தப்பட்டது. மேலும், 1999 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 222 மில்லியன் தொகையான வெகுமதிகளின் செலுத்துகைகள் 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 1,659 மில்லியனுக்கு அல்லது 647 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதிசார் விளைவுகளினை அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 164,425,880 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 25,457,489 மிகையொன்றினை விளைவித்திருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 138,968,391 பற்றாக்குறையொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதியத்தின் வருமானம் 2 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், நிதியத்தின் செலவினத்தின் அதிகரிப்பும் 4

சதவீதமாகக் காணப்பட்டமை மேற்குறித்த பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வெகுமதி நிதியத்தின் கீழ் உபநிதிகளிலுள்ள செலவிடப்படாத பணத் தொகை இந்த மிகைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல் வழங்கியவர்களுக்கிடையே ரூபா 8,239,471,880 மொத்த தொகையொன்று விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 7,454,724,025 தொகையொன்று அல்லது அந்தத் தொகையின் 90.47 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல் வழங்கியவர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 822 மில்லியன் தொகையொன்றாக மாத்திரம் காணப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டளவில் அது ரூபா 1,768 மில்லியன் தொகையொன்றுக்கு அல்லது 115 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஆகையினால், வெகுமதிகள் திட்டம் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடொன்றை அல்லது சுங்க தீர்வை தவறுகளினை குறைக்கக்கூடியதொன்றை நோக்கியதாக தாக்கமளித்திருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுங்க தவறுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சுங்க புலனாய்வுகளில் பின்பற்றப்பட்ட பொது நடைமுறையின் மூலம், இறக்குமதிகளின் மீது அரசிற்கு கிடைக்கவேண்டிய குறைந்த வரித் தொகையின் அறவிடுகையினை கருத்திற்கொள்ளாது வரி வருமானம் உள்ளடங்கலாக சுங்க தவறுகள் தொடர்பில் அபராதத்தினை விதிப்பதன் மூலம் அரசிற்கு கிடைக்கவேண்டிய வருமானத்தில் குறைவும் அவ்வாறான வகையொன்றில் விதிக்கப்பட்ட அபராதக் கட்டணத்தின் 50 சதவீதத்தினை உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிகளாக செலுத்துவதற்கான முன்மொழிவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) தற்போது நிலவும் திறந்த பொருளாதார கொள்கை காரணமாக இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதியிலும் ஏற்பட்டுள்ள பிணைப்புக்களுக்கு பொருந்தும் வகையில் சுங்க கட்டளைச் சட்டம் உட்பட இந் நிதியங்களின் சட்ட ஏற்பாடுகளில் முறையாகவும் காலரீதியாகவும் திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

(இ) நிதியத்தின் கீழ் வெகுமதிகளின் செலுத்துகைகளுக்காக முன்மொழியப்பட்ட சுங்க புலனாய்வுகளில் அதிகமானவை பொருட்களின் பெறுமதி குறைமதிப்பு, பொருட்களின் HE CODE இனை தவறுதலாக குறிப்பீடுதல், அறிவிப்பு ஆவணமொன்று (declaration) இன்றி பொருட்களினைக் கொண்டுவருதல், அறிவிக்கப்பட்ட (declared) பொருட்களுக்குப் பதிலாக ஏனைய பொருட்களினைக் கொண்டுவருதல், இலங்கைக்கு இறக்குமதிசெய்வதற்கு தடைசெய்யப்பட்ட பொருட்களினை இறக்குமதிசெய்தல் மற்றும் ஏற்றுமதிசெய்வதற்கு தடைசெய்யப்பட்ட பொருட்களினை ஏற்றுமதிசெய்தல் மற்றும் தீவிலிருந்து அல்லது தீவிற்கு அறிவிக்கப்படாத (Undeclared) பணத்தினை கொண்டுவருதல் அல்லது

எடுத்துச்செல்லல் போன்ற சுங்க தவறுகளுடன் தொடர்பில் நடாத்தப்பட்டிருந்த புலனாய்வுகளாகக் காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறான தவறுகளினை தடுப்பதற்கு இலங்கை சுங்கத்தில் நிலையான சம்பளங்கள் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டிருந்தபோதிலும் தொடர்ந்தும் காணப்படுகின்ற அவ்வாறான பிழைகள் மூலம் அரச வருமானத்திற்கு மேற்கொள்ளப்படும் பாதகமான தாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு போதியளவான நடவடிக்கை இத்திகதி வரை எடுக்கப்பட்டிருந்தமை, அவதானிக்கப்படவில்லை.

### 4.3 நிதிகளின் குறைப்பயன்பாடு

மீளாய்வாண்டில் எரிபொருள் நிதியம், வெகுமதிகள் நிதியத்தின் உப நிதியமொன்றிற்கு ரூபா 65,553,693 தொகையொன்று செலவுவைக்கப்பட்டிருந்தது. அந்த நிதியத்தின் ஸ்தாபிப்பின் நோக்கங்களாக சுங்க புலனாய்வுகளுக்குத் தேவையான எரிபொருள் செலவினங்களை தீர்ப்பதற்காக எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், புலனாய்வு செயற்பாடுகளுக்கு ஏற்பட்ட எரிபொருள் செலவினங்கள் திணைக்களத்தின் பொது செலவினத் தலைப்பிற்குரிய செலவினச் சுமையொன்றாக காணப்பட்டமையின் காரணமாக, மீளாய்வாண்டில் நிதியத்தினால் அவற்றிற்கு எவ்வித செலவினமும் ஏற்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், உண்மையான தேவைப்பாட்டினைக் கருத்திற்கொண்டிராது நிதியத்திற்கு தொடர்ச்சியாக பணத்தை சேகரித்தமை காரணமாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அதன் மீதி ரூபா 440,341,560 தொகையொன்றாகக் காணப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

ஏழு பாதிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உள்ளபடியான தொகைகளுடன் தொடர்புடைய தொகைகளுக்கிடையே 35 சதவீதம் தொடக்கம் 409 சதவீதம் வரையான வீச்சில் வேறுபாடுகள் காணப்பட்டமையினால் பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காமையினை சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சுங்க பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | முறையானதொரு பேரேட்டுக் கணக்குகள் முறைமையொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்படாமை |
| (ஆ) வெகுமதிகளினை கணிப்பீடு செய்தல் | வெகுமதி தொகையை கணிப்பிடும் போது அரசின் வரி வருமானம் பாதுகாக்கப்படும் வகையிலும், சுங்க வரி மோசடிகளில் கட்டுப்பாடொன்று ஏற்படும் வகையிலும் சுங்க வரி மோசடிகளில் ஈடுபடும் தரப்பினருக்கு ஆகக்கூடிய பாதகமொன்று ஏற்படக்கூடிய வகையில் நடைமுறை ரீதியான கணிப்பிடும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | வெகுமதிகளின் செலுத்துகை | கணக்குகள் கிளைக்கு வெகுமதிகள் கிடைக்கப்பெற்றுக் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் வெகுமதிகளின் சேகரிப்புக்களினை ஆவணப்படுத்தாமை மற்றும் காலக்கிரமமான கட்டளையின் பிரகாரம் செலுத்துகைகளினை மேற்கொள்ளாமை. |